Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 309

வியாழக்கிழமை
02 ஒக்ரோபர் 2025

புரட்டாதி 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## எரிவாயு விலை; மாற்றம் இல்லை

கொழும்பு, ஒக். 2
எரிபொருள் விலையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று லாப் நிறுவனம் தெரிவித்துள்ளது.
ஒக்ரோபர் மாதத்துக்கான 11

செம்மணியில் மூன்றாம்கட்ட அகழ்வு

## பட்ஜெட்டுக்கு தற்போதுவரை அனுமதி வழங்கப்படவில்லை

தவணையிடப்பட்டது வழக்கு

யாழ்ப்பாணம், ஒக். 2
அரியாலை செம்மணி மனிதப் புதை குழியில் மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட்டுக்கு இன்னமும் அனுமதி வழங்கப்பட வில்லை என்ற விடயம் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. 11





## முகமாலை வடக்கில் 31 குண்டுகள் மீட்பு!

கிளிநொச்சி, ஒக். 2
கிளிநொச்சி - பளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முகமாலை வடக்குப் பகுதியில் நேற்று 31 வெடி குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.
சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:-
முகமாலை 11

உள்ளக விசாரணையை பகுதியளவில் ஏற்ற

# வோல்கர் ட்ரக்கின் அறிக்கை தீக்கிரையானது செம்மணியில்

சிறுவர் என்புத்தொகுதிகளுக்கு நீதிகோரி பெரும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 1

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு சர்வதேச கண்காணிப்புடனான உள்ளகப் பொறிமுறையை பகுதியளவில் ஏற்றுக்கொண்ட, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக்கின் அறிக்கை செம்மணியில் நேற்று இடம்பெற்ற கவனவீர்ப்புப் போராட்டத்தின்போது தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. 11

கிளிநொச்சி தட்டுவன்கொட்டியில்

## கண்ணிவெடி அகற்றும் பணியை மீண்டும் முன்னெடுக்கவேண்டும்!

அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஒக். 2
கிளிநொச்சி - தட்டுவன் கொட்டிப் பகுதியில் மீண்டும் கண்ணிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்று அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ள 11

காற்றாலைக்கு எதிரான போர்

## வழக்குத் தொடரப்பட்டோருக்கு நீதிமன்றம் வழங்கியது பிணை

மன்னார், ஒக். 2
மன்னாரில் காற்றாலைக் கோபுரங்களுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டோர் மீது பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கில், மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் 11

சுற்றுலாவை மேம்படுத்த

## பருத்தித்துறை முனையில் படகுச் சவாரிக்கு ஏற்பாடு!

யாழ்ப்பாணம், ஒக். 2
வடமராட்சி பருத்தித்துறை முனை கடற்கரைப் பகுதியில் சுற்றுலாவை மேம்படுத்தும் நோக்கில் படகுச் சவாரிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 11



நஞ்சானது உணவு

## 47 மாணவர்கள் மருத்துவமனையில்!

விரிவு பக்கம்:- 11

வவுனியா, முல்லையில்

## வெப்பம் உக்கிரம்!

விரிவு பக்கம்:- 05

## பொலிகண்டியில் நேற்று படகொன்று தீக்கிரை!

பொலிஸார் விசாரணை

யாழ்ப்பாணம், ஒக். 2
வல்வெட்டித்துறை பொலிகண்டி ஆலடிப் பகுதியில் படகொன்றும், கடற்றொழில் உபகரணங்கள் சிலவும் நேற்றுத் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. 11



முச்சந்தி முரளி

'கண்ணிவெடியளை முழுக்க எடுத்திட்டம் எண்டாப் பிறகும் இப்பிடி வகைதொகையா கிடக்குது எண்டா எப்பிடித்தான் பயமில்லாம நிலத்தில கால்வைக்க ஏலும்?'



## தாஜுதீனின் உயிரிழப்புத் தொடர்பில் பாரபட்சமற்ற விசாரணை தேவையாம்

கோருகின்றார் நாமல்

கொழும்பு, ஒக். 2
தாஜுதீனின் மரணம் தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணை அவசியம் - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச வலியுறுத்தியுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தாஜுதீன் விடயத்தை 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி: 01.10.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 4211
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கங்கள்: 08 09 19 23
விசேட எழுத்து: G

**ஹந்தஹண ராசி சுப பலன்**
திகதி: 01.10.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 1278
வெற்றி இலக்கினம்: துலாம்
வெற்றி இலக்கங்கள்: 01 19 24 44

**NLB ஜய**
திகதி: 01.10.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0237
ஆங்கில எழுத்து: Y
வெற்றி இலக்கங்கள்: 1 2 9 7

**மெகா பவர்**
திகதி: 01.10.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 2317
ஆங்கில எழுத்து: Q
சுப்பர் இலக்கம்: 25
வெற்றி இலக்கங்கள்: 48 58 60 77

**மஹஜன சம்பத**
திகதி: 01.10.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 5969
ஆங்கில எழுத்து: X
வெற்றி இலக்கங்கள்: 6 2 2 0 2 5

**தன நிதானய**
திகதி: 01.10.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 1999
ஆங்கில எழுத்து: E
வெற்றி இலக்கங்கள்: 26 37 45 55
விசேட எழுத்து: E

**அத சம்பத**
திகதி: 01.10.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0544
ஆங்கில எழுத்து: X
வெற்றி இலக்கங்கள்: 2 0 2 5

**சுப தவசக்**
திகதி: 01.10.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0085
வெற்றி இலக்கினம்: மிதுனம்
வெற்றி இலக்கங்கள்: 17 25 30 36

# அபிவிருத்தி என்ற போர்வையில் மன்னாரில் நடக்கிறது இனஅழிப்பு

## அருட்தந்தை சக்திவேல் அறிக்கை

**கொழும்பு, ஒக்.2**

**இன அழிப்பை அபிவிருத்தியின் போர்வையிலும் தொடரலாம் என்பதற்கு மன்னார் காற்றாலை மின் உற்பத்தித்திட்டம் நிகழ்கால உதாரணம் என்று சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும் அரசியற்கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.**

அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மன்னார் காற்றாலைத் திட்டம் தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை காலடியில் மிதித்து மக்களை அவமதித்துள்ளார். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அமைதிப் போராட்டம் நடத்திய மக்களை அவமானப்படுத்தி, தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதை வன்மையாகக் கண்டிக்கின்றோம். போர் மௌனிக்கப்பட்டதன் பின்னர் கனியவளம் மட்டும் அல்ல தமிழர்கள் நிலத்தை அபிவிருத்தி எனும் போர்வையில் அந்நிய சக்திகளுக்குக் கொடுக்க முனைவதும், அதற்கு அமைதி வழியில் எதிர்ப்புத் தெரிவிக்கும் மக்களை தாக்குவதும் மீண்டும் பழைய நிலையைத் தோற்றுவிக்கவா? என்று கேட்கத் தோன்றுகின்றது. தமிழர்கள் முன்வைக்கும் போர்க் குற்றங்களுக்கான நீதிக்கு அப்பால் அரச பயங்கரவாதப் படையினர் பலவந்தமாகக் கட்டிய விகாரைக்கு இதுவரை நீதி கிட்டவில்லை. கிழக்கின் மயிலத்தமடு மாதவனைப் பண்ணைப் பணியாளர்களின் போராட்டத்திற்கு நீதி கிடைக்கவில்லை. மன்னார் காற்றாலை மற்றும் கனியவளம் அகழ்வு தொடர்பில் உறுதியளித்த நீதியை மறுப்பதும் தமிழர்களுக்கு எதிரான அழிப்பே. தற்போதைய ஆட்சியாளர்களும் கடந்த காலத்தைப் போன்று சிங்கள பௌத்த பேரினவாத மனநிலையிலேயே ஆட்சியைத் தொடர்கின்றனர் என்பதையே அண்மைய சம்பவங்கள் உறுதிசெய்கின்றன. இதை அரசியல் மயப்படுத்தப்பட்ட மக்களின் பலத்துடன் தான் முறியடிக்கமுடியும். இனியும் காலம் தாமதிக்கக்கூடாது - என்றுள்ளது. (எ-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி: 01.10.2025 | தினம்: புதன்கிழமை
வெற்றி வாரம்: 0677
ஆங்கில எழுத்து: X
வெற்றி இலக்கம்: 0 5 4 4 8 5

**Super Ball**
திகதி: 01.10.2025 | தினம்: புதன்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 2943
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கம்: 56 58 74 79

**சனிதா**
திகதி: 01.10.2025 | தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: T
வெற்றி இலக்கம்: 09 18 31 40
வெற்றி வாரம்: 5004

**லக்ன ராசி**
திகதி: 01.10.2025 | தினம்: புதன்கிழமை
கன்னி
வெற்றி இலக்கம்: 14 15 56 57
சீட்டிழுப்பு வாரம்: 4655

**KAPRUKA**
திகதி: 01.10.2025 | தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: T
சுப்பர் இலக்கம்: 19
வெற்றி இலக்கம்: 15 22 35 37
வெற்றி வாரம்: 2119

**அத கோடிபதி**
திகதி: 01.10.2025 | தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: Y
வெற்றி இலக்கம்: 07 37 41 50
வெற்றி வாரம்: 2769

**JAYODA**
திகதி: 01.10.2025 | தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து:
வெற்றி இலக்கம்: 06 19 50 66
வெற்றி வாரம்: 2166

# நாடு திரும்பினார் ஜனாதிபதி அநுர

கொழும்பு,ஒக்.2

ஜப்பான் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று புதன்கிழமை நாடு திரும்பியுள்ளார்.

செப்ரெம்பர் 27 ஆம் திகதி ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை ஆரம்பித்த ஜனாதிபதி, ஜப்பானின் ஒசாகா நகரில் நடைபெற்ற “எக்ஸ்போ 2025” கண்காட்சியில் இலங்கை தின நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நெருங்கிய நட்புறவையும் ஒத்துழைப்பையும் மேலும் வலுப்படுத்துவதையும், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம், முதலீடு மற்றும் பொருளாதார உறவுகளை விரிவுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்டபல இருதரப்புக் கலந்துரையாடல்களிலும் ஜனாதிபதி பங்கேற்றார். (ச-இ)

# ஜெனிவாவில் புலிக்கொடி பறக்க இடமளிக்கக்கூடாது

## கே.பி. தசநாயக்க தெரிவிப்பு



கொழும்பு,ஒக்.2

ஜெனிவாவில் புலிக்கொடியைக் காட்சிப்படுத்துவதற்கும், புலி ஆதரவாளர்கள் பரப்புரைகளில் ஈடுபடுவதற்கும் சுவிட்சர்லாந்து அரசாங்கம் இடமளிக்கக்கூடாது என்று ஒற்றையாட்சி மற்றும் இராணுவத்தைப் பாதுகாக்கும் அமைப்பின் ஏற்பாட்டாளரும், முன்னாள் கடற்படை அதிகாரியுமான டி.கே.பி. தசநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் ஜெனிவாவில் நடைபெற்றுவருகின்றது. தமிழ்ப் புலம்பெயரிகள் மற்றும் புலி ஆதரவாளர்கள் அங்கு பரப்புரையில் ஈடுபட்டுவருகின்றனர்.

32 நாடுகளில் புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்டுள்ளது. இலங்கையிலும் அந்த அமைப்பு தடைசெய்யப்பட்டுள்ளது.

எனவே, தடைசெய்யப்பட்ட அமைப்பின் ஆதரவாளர்கள் பரப்புரையில் ஈடுபடவும், கொடிகளைக் காட்சிப்படுத்தவும் இடமளிக்கக்கூடாது - என்றார். (ச-44)

# முதியவர்களின் அனுபவங்கள் நாட்டின் வளர்ச்சிக்கு உந்துசக்தி

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.2

இலங்கையின் மக்கள் தொகையில் 100 வயதைக் கடந்து கிட்டத்தட்ட 547 பேர் உள்ளனர் என்று அண்மைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் சிறந்த அனுபவசாலிகளாக இருப்பதுடன், ஆரோக்கியமாக வாழ்ந்தனர் என்பதற்கும் எடுத்துக்காட்டானவர்கள். இவர்களை நாட்டின் வளர்ச்சியில் பயனுள்ள வகையில் இணைத்துக்கொள்வது எமது பொறுப்பாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

சிறுவர்களின் பாதுகாப்பு சமூகத்தின் நல்வாழ்வாகும். சமூகத்தின் நல்வாழ்வை எதிர்காலத்துக்கு பரம்பரையாக்கும் முதியவர்கள் ஒரு நாட்டின் முன்னோடிகள். இவர்களைப் பாதுகாத்தல், பராமரித்தல், பொறுப்புகள் மற்றும் கடமைகளைச் சரியாக நிறைவேற்று வது அனைவரின் பொறுப்பாகும்.

தற்போதைய சமூகத்தில் சிறுவர்கள், முதியவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் பரிசீலிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

சமூகத்தை விழிப்புணர்வு செய்வதற்கான திட்டங்கள் மேலும் பலப்படுத்தப்படவேண்டும்- என்றார். (க-இ)

# கெஹலிய வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,ஒக்.2

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, அவரது மனைவி, மூன்று மகள்கள் மற்றும் மருமகனுக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என கொழும்பு மேல்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த வழக்கு கொழும்பு மேலதிக நீதிவான் மொஹமட் மிஹால் முன்னிலையில் நேற்று புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடமாற்றங்களை நிராகரிப்பதில் கல்வித்துறையினர் முன்னிலை

## பிரதமர் ஹரிணி சுட்டிக்காட்டு

கொழும்பு,ஒக்.2

**கல்வித்துறை சார்ந்தோரே இடமாற்றங்களை நிராகரிப்பதில் முன்னிலையில் உள்ளனர். இடமாற்றங்களுக்கு இணங்காத பொதுச்சேவையில் உள்ள ஒரே துறையாக இது மாறியுள்ளது. அந்தவகையில் ஆசிரியர் மற்றும் அதிபர் இடமாற்றங்களைச் சமநிலைப்படுத்துவது துரிதப்படுத்தப்படவேண்டும் என்று கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இடமாற்றங்களுக்கு இணங்கத் தவறிய ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது. இயலாமையுடைய மாணவர்களை பல்கலைக்கழகங்களில் அனுமதிப்பது தொடர்பான கொள்கைத் தீர்மானங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

அதற்கமைவாக அடுத்த கல்வியாண்டுமுதல், அனைத்துத் துறைகளுக்கும் ஒரு ஒதுக்கீட்டு முறைமையின் அடிப்படையில் இந்தக் கொள்கை செயற்படுத்தப்படுவதுடன், இயலாமையுடைய மாணவர்களுக்குத் தகுதி அடிப்படையிலான மாவட்ட ஒதுக்கீட்டு முறைமையின் மூலமாகவும் அனைத்துத் துறைகளுக்கும் பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படவுள்ளது.

அதேவேளை பல்வேறு மாவட்டங்களில் காணப்படும் கல்வி தொடர்பான பல்வேறு முக்கியமான பிரச்சினைகள் தொடர்பிலும் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டன. (க-இ)

## 'கடைசித் தரிப்பிடம்' யாழில் திரையிடல்

யாழ்ப்பாணம், ஒக்.2

நெறியாளர் சுஜித்ஜி இயக்கத்தில் 'கடைசித்தரிப்பிடம்' திரைப்படம் 18/2, அம்மன் வீதி, கந்தர்மடம், எங்கட புத்தகங்கள் இல்லத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு திரையிடப்படவுள்ளது.

புலம்பெயர்ந்த எம்மவரால் இங்கிலாந்தில் உருவாக்கப்பட்ட இந்தப் படைப்பு, மாணவர் 'விசா' மூலம் இங்கிலாந்துக்குச் செல்லும் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களைச் சித்தரிக்கிறது. யாழ்ப்பாணத் திரைப்படக் கழகத்தின் 16 ஆவது திரைப்படக் காட்சியாக இந்தத் திரைப்படம் திரையிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-25)

## இலங்கையுடனான வர்த்தகம் அமெ. தடைகளால் பாதிக்கும்


### ரஷ்யத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.2

ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்கா விதித்துள்ள தடைகள் காரணமாக, ரஷ்யா மற்றும் இலங்கைக்கான இருதரப்பு வர்த்தகம் மற்றும் சுற்றுலாத்துறைக்குப் பாதிப்பு ஏற்படும் என்று ரஷ்யத் தூதுவர் லெவன் ஜாகார்யன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா விதித்துள்ள தடைகள் காரணமாக இலங்கையில் மின்னணுப் பரிவர்த்தனைகள் சாத்தியமற்றது. அதனால், ரஷ்ய சுற்றுலாப்பயணிகள் கையில் பணத்தை எடுத்துச் செல்லவேண்டிய கட்டாயம் ஏற்படும்.

ரஷ்யா - உக்ரைன் போர் முடிந்த பின்னரே, இருதரப்பு வர்த்தகத்தைத் தொடரமுடியும். போரை முடிவுக்குக்கொண்டு வருவதாயின், தடைகளை நீக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (க-இ)



## வடக்கு, கிழக்குப் பாடசாலைகளை நவீனமயப்படுத்த 'நிப்பொன்' உதவி!

கொழும்பு, ஒக்.2

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள 100 பாடசாலைகளின் புனரமைப்பு மற்றும் நவீனமயமாக்கலுக்கான எதிர்காலத் திட்டங்களை முன்னெடுக்க ஜப்பான் நிப்பொன் மன்றம் உத்தரவாதமளித்துள்ளது.

டோக்கியோவில் உள்ள நிப்பொன் மன்றத்தின் ஸ்தாபகத் தலைவருக்கும் ஜப்பானிய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் ஜப்பானுக்குச் சென்ற ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையே நடந்த கலந்துரையாடலில் இந்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது. இலங்கையில் உள்ள அனைத்து சமூகங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்குத் தொடர்ச்சியான ஆதரவை வழங்கும் என்றும் நிப்பொன் மன்றத்தின் ஸ்தாபகத் தலைவர் ஜனாதிபதியிடம் தெரிவித்தார். (ஏ-இ)

## விமானப்பயண முன்பதிவுக்கு டிஜிற்றல் வசதி!

கொழும்பு,ஒக்.2

யூனியன் பே (Union Pay) ஊடாகப் பணத்தைச் செலுத்தி விமான பயணச்சீட்டுகளை முன்பதிவு செய்யும் வசதியை ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் யூனியன் பே இன்டர்நேஷனல் மற்றும் இலங்கை வங்கி ஆகியவற்றுடன் இணைந்து இந்தப்புதிய முறைமையை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தப் புதிய முறைமை இணையவழிக் கட்டண முறைகளை விரிவுபடுத்துகிறது. இது வளர்ந்துவரும் டிஜிற்றல் முறைமையை மேலும் பலப்படுத்துகிறது. இதனால் விமானப் பயணச்சீட்டுகளை இலகுவாக முன்பதிவு செய்துகொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




## பல்லி வாலைக் கழட்டிற மாதிரி...!

"எங்கப்பன் குதிருக்குள்ள இல்லை" எண்டு சொல்லுற மாதிரி "எங்கட டிப்பருக்குள்ள மணல் இல்லை" எண்டு தப்பிறதுக்காக உந்தக் கள்ளமண் ஏத்துறவையின்ர விளையாட்டால சனத்துக்குத்தான் பெரும் நெருக்கடி. கள்ளமண் ஏத்திக்கொண்டு வாறவை சும்மா வாறேலை. அந்த டிப்பர்கள் வெளிக்கிட முதலே, அவையின்ர 'றெக்கி குரூப்' மோட்டர் சைக்கிளில முன்னுக்கு வெளிக்கிட்டிடும். அப்பிடி மோட்டர் சைக்கிளில போறவை வழியில எங்கையாவது பொலிஸ் நிண்டால், உடனேயே போனில டிப்பருக்கு விசயத்தைச் சொல்லிடுவினம். அதுக்கேத்தபடி றோட்டை விட்டுட்டு ஏலும் மட்டும் ஒழுங்கையள், சனப் புழக்கம் குறைஞ்ச பாதையளாலதான் கள்ளமண் டிப்பர்கள் போய்வரும். எண்டாலும் எவ்வளவு தூரம்தான் இப்பிடி ஒழுங்கைக்குள்ள ஓடிப்பிடிச்சி விளையாட ஏலும்? ஒரு கட்டத்தில அந்த டிப்பர்கள் மெயின்றோட்டுக்கு வரத்தானே வேணும். அந்த நேரத்தில முன்னுக்கு மோட்டர் சைக்கிளில போன றெக்கிக்காரருக்கே தெரியாமல் ஒளிச்சு நிக்கிற பொலிஸ், உந்த டிப்பர்களைப் பிடிக்கக் கலைப்பினம்.

அந்த நேரம் டிப்பர்கள் கண்மண் தெரியாமல் ஓடும். அப்பிடி ஓடேக்க "எப்பிடி ஓடினாலும் மாட்டுப்பட்டுப் போடுவம்" எண்ட நிலைவரேக்க, டிப்பர்காரர் ஒருவேலை செய்வினம். ஓடிக்கொண்டிருக்கேக்கையே அப்பிடியே பின்பெட்டியைத் தூக்கி, அதுக்க இருக்கிற மணலை றோட்டில கொட்டுறதுதான் அந்தவேலை. அப்பிடி ஒரேயடியா ஒருடிப்பர் மணலும் கொட்டுப்படேக்க, பெருசா புழுதி கிளம்பி பின்னால துரத்திக்கொண்டுவாற பொலிஸ்காரருக்கு இடைஞ்சலா இருக்கும். அதோட றோட்டுமுழுக்க மணலா மாறிடும். அதுக்குப் பிறகு வாகனங்கள் வேகமா வந்தால், மணலுக்க சறுக்குப்படோணும். அதால மணல்கொட்டுப்பட்டவுடனேயே வாகனத்தை 'ஸ்லோவா' ஓட, அதைப்பாவிச்சு,டிப்பர்காரர் மின்னிக்கொண்டு பறந்திடுவினம். அதுக்குப் பிறகு பொலிஸ் அந்த டிப்பரைப் பிடிச்சாலும், அதுக்க மணல் இருக்காது. "எங்களை பொலிஸ்காரர் வேணுமெண்டு பிடிச்சிட்டினம். நாங்கள் மணல் ஏத்திக்கொண்டு வரேலை" எண்டு டிப்பர்காரர் ஒரேபிடியா நிப்பினம். ஆனால் அவை கள்ளமண் ஏத்தினத்துக்கு பொலிஸிட்டையும் ஆதாரம் இருக்காது. அதால டிப்பரில இருக்கிற மணலைக் கொட்டினால், டிப்பர்காரரில வழக்குப் போடுறது கஷ்டம். இது டிப்பர்காரருக்கும் நல்லாத் தெரியும். அதாலதான் பல்லி வாலைக் கழட்டிப்போட்டு தப்பிறமாதிரி, இவையள் மணலைக் கொட்டிப்போட்டு ஓடித்தப்புகினம்.

இப்பிடி அவையள் தங்களைப் பொலிஸ் பிடிக்கக்கூடாது எண்டதுக்காக கொட்டுற மணல், அடுத்தநாள் முழுக்க றோட்டில பரவுண்டபடி கிடக்கும். இப்பிடியொரு சம்பவம் நடந்ததெண்டே தெரியாமல் அதால போறவாற வாகனங்கள் திடீரெண்டு மணலுக்க மாட்டுப்பட்டுச் சறுக்கிறதும், மோட்டர் சைக்கிளில ஓடிவாறவை மணல் சுழிச்சு அப்பிடியே அதில கவிழுறதுமா இருக்கும். பொலிஸ்காரரும் டிப்பர்காரர் கொட்டிப்போட்டு போற மணலை அகற்றுறேலை. ஆரும் அக்கம் பக்கத்தில உள்ளவைதான் இப்பிடித் தானா வந்த மணலை விட்டுடக்கூடாது எண்டு கொஞ்சம் கொஞ்சமா உரப்பையளுக்க எடுத்துக்கொண்டு போவினம். அதுமட்டும் றோட்டில போய்வாற வாகனங்கள் மணலுக்க கதகளி ஆடவேண்டியதுதான். இப்பிடி றோட்டுகளை மண்கொட்டி விளையாடுறவையை எப்பிடி நிப்பாட்டுறது எண்டு ஒருத்தருக்கும் ஒருவழியும் தெரியேலைக் கண்டியளோ.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 02 . 1958



மறைவு 01 . 10 . 2025

## செல்வி நமசிவாயம் தெய்வானைப்பிள்ளை (கிளி)

வாரியத்தனை கரவெட்டி (புளியம்பொக்கணை)

வதிரி கரவெட்டியை பிறப்பிடமாகவும் புளியம்பொக்கணையை வாழ்விட மாகவும் வாரியத்தனை கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய தர்மகர்த்தா பரம்பரை பூசகரின் வழித்தோன்றல் செல்வி.நமசிவாயம் தெய்வானைப்பிள்ளை (கிளி) அவர்கள் நேற்று (01.10.2025 ) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பூசகர் நமசிவாயம் -வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மணியம் என்ற சிவசுப்பிரமணியம் முன்னாள் பூசகர் (நாகதம்பிரான் ஆலயம் - புளியம்பொக்கணை) இன்னாள் பூசகர் குஞ்சு என்ற புவனேந்திரன் (நாகதம்பிரான் ஆலயம்-புளியம்பொக்கணை) ஆகியோரின் அன்பு சகோதரியும், சீதாலட்சுமி, மல்லிகா அவர்களின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற கிருஷாந்தி, காலஞ்சென்ற முரளீதரன், லக்கி, துசிதா, லக்சிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (02.10.2025) வியாழக்கிழமை அவரது கரவெட்டியில் உள்ள இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரிகைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் பூதவுடல் சோனப்பு இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
0770266277
0770538784

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 46196) A

# கட்டடம் அல்லது வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம் நாவலர் வீதி, பிறவுண் வீதி, மற்றும் ஆரியகுளம் சுற்று வட்டத்தை கொண்ட பகுதியில் தனியார் கல்வி நிலையம் நடாத்து வதற்கு கட்டடம் அல்லது வீடு தேவை.

**0777 44 44 07**

# சமையலாளர் தேவை



யாழ்ப்பாணம்
நகரப்பகுதியிலுள்ள குடும்பம்
ஒன்றுக்கு தகைமையும்
அனுபவமும் வாய்ந்த
சமையலாளர் தேவை.

தேவையேற்படின் தங்குமிட வசதியும்
உணவும் வழங்கப்படும்.

**கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்**

**தொடர்பு: 0771209998**

# 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## ஜெனார்த்தனன் அச்சுதன்

(AL 2012 ஆம் ஆண்டு யாழ்.
இந்துக் கல்லூரி பழைய மாணவன்)




ஒளி வீசும் உந்தன் திருவதனம்
மண்ணுலகம் விட்டு விண்ணுலகம்
சென்றதேனோ?
உன் பிரிவுத் துயர் தாங்காது
தவிக்கின்றோம்.

ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.
கோகுலம் புடைவையகம். இல.22, நவீன சந்தை மேல்மாடி,
தகவல் - அம்மா (சிவமலர்), அப்பா மற்றும் உறவினர்

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக்.2
சைவ வாழ்வியலில் திருவிளையாடற்புரா ணம் பெறும் முக்கி யத்துவம் பற்றிய விழிப்பு ணர்வை ஏற்ப டுத்தும் முகமாக சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்கா மன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளை யாடற்புரா ணச் சிறப்புச் சொற் பொழிவுத்தொடர்–25 நாளை வெள்ளிக்கி ழமை மாலை 4மணிக்கு அராலி கிழக்கு மலையாளங் காடு ஐயனார் கோவி லில் நடைபெறவுள் ளது. இதன்போது பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும், இளஞ்சை வப்புலவர் பிரசங்கச்சு டர் நித்திய பாபுதர னின் "மெய்க்காட்டிட்ட படலம் எனும் தொனிப் பொருளில் சொற்பொ ழிவும் இடம்பெறும். சொற்பொழிவிலி ருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக் கப்பட்டுப் பாராட்டுப்பரி சில்கள் வழங்கப்பட வுள்ளன. (ச–41)

# இரண்டாம் ஆண்டு நினைவுகளுடன்



## அமரர் சதாசிவம் தவச்செல்வம்

(உரிமையாளர் செல்வம் கூல்பார் (செல்வம் மாமா)
சாவகச்சேரி
திதி: பூர்வபட்ச தசமி

அன்பு அப்பாவிற்கு கண்ணீருடன்
ஒரு மடல்...........

மாமா செல்வம் மாமா
தவச்செல்வம்
ஒவ்வொரு இடத்திலும் உங்கள்
பெயர் வித்தியாசப்பட்டாலும்
எமக்குப்பிடித்த பெயர்
அப்பா மட்டும் தான்

அப்பா அப்பா
இப்படி இரண்டு ஆண்டுகளாக
காற்றில் தான் சத்தமிட முடிகிறதே தவிர
கண்ணெதிரே நீங்கள்
இல்லையேயப்பா

இரண்டு அல்ல எத்தனை
ஆண்டுகள் ஆனாலும் கூட - எம்
உச்சரிப்பு அகராதியிலிருந்து
உதிர்ந்து விடாது.
அப்பா என்ற சொல்

சாதாரண நாட்களை விட
வருடப்பிறப்பு. பொங்கல்
தீபாவளியென
வந்து போகும்
பண்டிகைக் காலங்களில்
எங்கிருந்தாலும்
ஓடிவந்து விடுகின்றது
அப்பாவின் நினைவு

தனிமனிதனாய் நீங்கள்
செய்த வேலைகளில்
பாதியேனும் எம்மால்
செய்ய முடியவில்லை
சோர்ந்து விடுகிறோம்
அப்பா - உங்கள்
இழப்பினால்

முயற்சிகள் சிலநேரம்
முடக்கி வைக்கப்படும் போது
தன்னம்பிக்கையாய்
இதயத்தில்
துளிர்த்து விடுகிறீர்கள்
அப்பா

ஒருவருக்கு யாரேனும்
இல்லையென்றால்
அநாதை என்போம்
ஆனால் எமக்கு - நீங்கள்
ஒருவர் இல்லையெனினும்
நாங்கள் அநாதை தான்

தெருக்களில் போகும் போது
வெற்றிலை வாயுடனும்
அப்பாவின் முகச்சாயலுடனும்
யாரேனும்
கண்டாலும் எளிதில்
ஏமாந்து விடுகிறோம்
இறுதிக் கிரியைகள் செய்ததையும்
மறந்து

நீங்கள் அமர்ந்த இருக்கை
நடந்து வந்த பாதை
உங்கள் வாகனம்
உடுத்திய வேட்டி சேட்டுக்கள்
இவையாவும்
நீங்கள் எம்மோடு இருந்த
ஞாபகங்களை எமக்கு
மறு ஒலிபரப்புச் செய்து
கொண்டிருக்கிறது.

இறுதிப் பார்வை
கடைசிச் சிரிப்பு
இறுதி வார்த்தை
கடைசித் தொடுகை
இவையாவும்
ஒவ்வொன்றாய்
நினைத்துப் பார்க்கின்றோம்
கண்ணீரோடு

நினைத்துப் பார்க்கும் ஒவ்வொன்றும்
துக்கத்தையே மட்டும்
பரிசாகத் தருகின்றது
உங்கள் மரணம் போல்
ஓர் பாடம் எமக்கில்லை

மறுபடியும் இறைவன்
காலத்தை சுழற்றி
நீங்கள் இறந்த நாளின்
முந்தின நாளிலிருந்து
எல்லாவற்றையும் அழித்திடமாட்டானா
நடக்கப்போவதில்லை என்றாலும்
நப்பாசையுடன்
ஆண்டுகள் இரண்டு தான்
கடந்து விட்டோம்

நீங்கள் இறந்துவிட்டதாக
இவ்வுலகமே பிதற்றினாலும்
எம்மோடு வாழ்ந்து கொண்டிருப்பதாக
எண்ணியே கடந்து விடுகின்றோம்.
எம் வாழ்வின் மிகுதி
நாட்களையும்.

தோற்றம் 24.02.1954
மறைவு 24.09.2023

நுணாவில் சந்தி,
சாவகச்சேரி.

(CS/30513) J-1

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

வலிமை வெற்றியினால் வருவதல்ல,
வெற்றிக்கான போராட்டத்தினால் வருவது.

– ஆர்னோல்ட் ஸ்வார்ஸ்னேக்கர்


# கடன்களும் கயிறுகளும்!

வன்னிப் பிராந்தியத்தில் கடன் சுமைகள் காரணமாக பெண்கள் தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்பது அதிகரித்துள்ளது என்று தனது அதிருப்தியையும் கவலையையும் வெளியிட்டுள்ளார் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர். போர் இடம்பெற்ற பிராந்தியங்களிலும், வறுமைப்பட்ட மாவட்டங்களிலும் கடன்களால், அதிலும் குறிப்பாக நுண்நிதிக் கடன்களால் பெண்கள் உயிர்மாய்ப்பது நீண்டகாலப் பிரச்சினையாகவே தொடர்ந்து வருகின்றது. கடந்த சில ஆண்டுகளில் அண்ணளவாக இருநூறுக்கும் மேற்பட்ட பெண்கள் கடன் சுமைகளால் உயிர்மாய்த்துள்ளனர் என்று தேசிய மகளிர் ஒன்றியமும் அண்மையில் அறிக்கையிட்டிருந்த நிலையில்தான், கிட்டத்தட்ட அதேபோன்றதொரு கருத்தைப் பிரதிசெய்துள்ளார் அமைச்சர் சந்திரசேகர்.

30 ஆண்டுகாலப் போர் காரணமாக இலங்கையில் ஏராளமான குடும்பங்கள் குறிப்பாக பெண் தலைமைக் குடும்பங்களாக்கப்பட்டு, வறுமைக்கோட்டுக்குள் தள்ளப்பட்டுள்ளன. பொருளாதாரத்தில் கடும் பின்னடைவைச்சந்தித்துள்ள பெண் தலைமைக்குடும்பங்களில் பெரும்பாலான குடும்பங்கள் வடக்கு - கிழக்கைச் சார்ந்தவை. இவ்வாறு வறுமையின் பிடியிலுள்ள குடும்பங்களைத்தான் மேலும்மேலும் இலக்குவைத்து இரையாக்கிச்சாகடிக்கின்றன இந்த நுண்நிதி நிறுவனங்களும், அவற்றின் கடன்களும். அப்படியிருந்தும் நுண்நிதிக் கடன்களை வழங்குவது தொடர்பிலும் அவற்றைத் திரும்பப் பெறுவது தொடர்பிலும் இதுவரை எந்தக் காத்திரமான பொறிமுறையும் இலங்கை அரசாங்கங்களால் இதுவரை வகுக்கப்படவில்லை என்பது மிகப்பெரும் தோல்வியே.

நுண்கடன் என்பது சிறிய தொகையை கடனாக வழங்குவதிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட நல்லதொரு முறைதான். பெண் தலைமைத்துவக் குடும்பங்களை சுயதொழில் முனைவோராக மாற்றுவதே இதன் உண்மை நோக்கம். இந்தத் திட்டத்தை முதன்முதலில் பங்களாதேஷின் வங்கியே ஆரம்பித்தது. இதில் முன்னின்று உழைத்தவர்களில், பங்களாதேஷின் தற்போதைய இடைக்கால அரசாங்கத்தின் தலைமை ஆலோசகரான மொகமட் யுனுஸும் ஒருவர். இதற்காக அவருக்கு நோபல் பரிசிலும் வழங்கப்பட்டது. ஏனெனில், இந்த நுண்கடன் திட்டத்தின்மூலம் அவர்கள் பல வறிய மக்களை சுயதொழிலில் ஈடுபடுத்தி வெற்றிகண்டனர். இலட்சக் கணக்கானவர்களின் வாழ்க்கையை மாற்றினார்கள். அதன்பின்னர் பங்களாதேஷில் இருந்து வேறுசில வளர்ந்துவரும் நாடுகளுக்கும் இந்த நல்ல திட்டம் பரவியது. ஆனால், இலங்கையில் குறிப்பாக வடக்கு - கிழக்கில் அதன் நிலைமையோ வேறு.

வாழ்வாதாரத்துக்கான எந்தப் பிடிமானமும் இல்லாத நிலையில், பெண் தலைமைக் குடும்பங்கள் பலவற்றின் ஒரே தெரிவாக நுண்நிதி நிறுவனங்கள் அமைந்துவிடுகின்றன. நிறுவனங்களும் அந்தக் குடும்பங்களை எவ்வளவுக்குப் பயன்படுத்த முடியுமோ அவ்வளவுக்குப் பயன்படுத்திக்கொள்கின்றன. தாம் கடன் கொடுக்கும் குடும்பங்கள், அந்தக் கடனைத் திரும்பச் செலுத்தக் கூடிய இயலுமையில் உள்ளனவா? என்ற குறைந்தபட்ச எண்ணம்கூட நுண்நிதி நிறுவனங்களுக்கு இருப்பதில்லை. பின்னர், அந்தக் கடன்களுக்கான வட்டிகள், அதற்குரிய வட்டிகள் என்று அனைத்தும் சேர்த்து 'குருவியின் தலையில் பனங்காயாக' அந்தக் குடும்பங்களை நெருக்கும்போது மூச்சை நிறுத்துவதே முடிவாக அமைந்துவிடுகின்றது. நிதி நிறுவனங்களின் நுண்கடன் திட்டங்கள் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படவேண்டும். நிறுவனங்களின் நடைமுறை, கடன்வாங்கும் முறை, பயனாளர்களின் தெரிவு, வட்டி வீதம் போன்ற பலவிடயங்கள் முறைப்படுத்தப்படாத பட்சத்தில், இந்த நுண்கடன்களால் ஏற்படப்போகும் பாதிப்புகள் மென்மேலும் பரந்து விரியும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.




# பால் உற்பத்தி மேம்பாட்டுக்கு ஜப்பானுடன் ஒப்பந்தம்!



கொழும்பு,செப்.2

**ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன், இலங்கையின் பால் உற்பத்தித்துறையின் செயற்றிறனை மேம்படுத்தும் பிரதான ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.**

ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் தலைவர் டனாகா அகிஹிகோவை சந்தித்துக் கலந்துரையாடியபோதே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கையின் அபிவிருத்திக்கு ஜப்பான் மீண்டும் கடன் வழங்க ஆரம்பித்துள்ளது. இதனை நினைவுபடுத்திய ஜனாதிபதி, ஜப்பான் வழங்கும் தொடர்ச்சியான ஆதரவுக்கு சந்திப்பில் நன்றி தெரிவித்தார். இலங்கையுடனான நீண்டகால ஒத்துழைப்பை மேலும் பேணுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கழிவு முகாமைத்துவத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் டிஜிற்றல் பொருளாதாரத் துறையை மேம்படுத்துதல் உள்ளிட்ட திட்டங்கள் தொடர்பிலும் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டன. (சு-இ)

# ஹெரோய்னுடன் பொலிஸ் கைது!

கொழும்பு,ஒக்.2

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் 400 கிராம் ஹெரோய்னுடன் மேற்கு வடக்குக் குற்றப்பிரிவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

உடப்புவ பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிளே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவராவார்.

சந்தேகநபரிடமிருந்து சுமார் 110 கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# பஸ் கட்டணம் மாற்றமில்லை

கொழும்பு,ஒக்.2

எரிபொருள் விலையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், பஸ் கட்டணங்களில் எந்தத் திருத்தமும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# திரிபோஷா உற்பத்தி தற்காலிக நிறுத்தம்!

கொழும்பு,ஒக்.2

திரிபோஷா உற்பத்தி கடந்த செப்ரெம்பர் 21 முதல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை திரிபோஷா லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் அமல் அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

உற்பத்திக்குத் தேவையான மக்காச்சோளம் கிடைக்காத காரணத்தினாலேயே இந்த இடைநிறுத்தம் என்று இலங்கை திரிபோஷா நிறுவனம் அறிவித்துள்ளது. (ச-இ)

# வெப்பம் எச்சரிக்கை



கொழும்பு,ஒக்.2

நாட்டின் 8 மாவட்டங்களில் வெப்பமான வானிலை நிலவக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது. வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் மனித உடலால் உணரப்படும் வெப்பநிலை, எச்சரிக்கை மட்டத்தை எட்டக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை
வெள்ளிக்கிழமை - புரட்டாதி 17
03.10.2025
சுபநேரம் : 06.02 - 07.32
ராகுகாலம் : 10.32 - 12.02

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. பிற்பகலுக்கு மேல் சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அலுவலகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். அதிகாரிகளின் ஆதரவு உண்டு.

**இடபம்:** உற்சாகமான நாள். எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு உறவினர் அல்லது நண்பர்கள் மூலம் புதிய ஆடை, ஆபர ணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாக னத்தில் செல்லும்போது கவனம் தேவை.

**மிதுனம்:** உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். தாய்வழியில் திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். சிலருக்கு நீண்டநாளாக முடியாமல் இருந்த தெய்வ பிரார்த்தனைகளை நிறை வேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**கடகம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. திடீர்ச் செலவுகளும் ஏற்படக்கூடும். தாய்மாமன் வகையில் நீண்டநாளாக எதிர்பார்த்த உதவி இன்று கிடைக்கக்கூடும். வாழ்க்கைத் துணை வழியில் செலவுகள் ஏற்படலாம்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்க அதிகாரிகளால் ஆதாயம் உண்டாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**கன்னி:** உடல்நலனில்கவனம்செலுத்தவேண்டிய நாள். சகோதரர்களிடம் அனுசரணையாக நடந்து கொள்வது நல்லது. சிலருக்கு திடீர் பணவரவுடன் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக் கூடும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**துலாம்:** ஆனால், புதியமுயற்சி சாதகமாக முடியும். குலதெய்வ பிரார்த்தனைகளை நிறை வேற்றுவீர்கள். தாய்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம்தேவை. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** மனதில் உற்சாகம் ஊற்றெடுக்கும். தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**தனுசு:** காரியங்கள் இழுபறியாக முடியும். தேவையான பணம் இருந்தாலும், எதிர்பாராத செலவுகளால் மனச் சஞ்சலம் உண்டாகும். சகோதர வகையில் வீண்செலவுகள் ஏற்படக் கூடும். பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கும்.

**மகரம்:** கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் ஏற்படும். முடிவில் வாழ்க்கைத்துணை யின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். கோயில்களுக்குச் சென்று வருவீர்கள்.

**கும்பம்:** தேவையான பணம் கையில் இருந்தா லும், எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரைவதுடன், சிலர் கடன் வாங்கவும் நேரிடும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**மீனம்:** வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். கணவன் மனைவிக்கி டையே சிறுசிறு வாக்குவாதம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படக்கூடும்.

# வெற்றியைத் தரவல்லது விஜயதசமி



■ கே.எஸ்.சிவஞானராஜா

இந்துக்கள் கொண்டாடும் விரதங்களுள் மிக வும் சக்திவாய்ந்த தேவி விரதம் நவராத்திரி யாகும். ஒன்பது இரவுகளும் முத்தேவிய ரைப் போற்றியும், பாடியும், வாழ்த்தியும் வழிபட்டு பத்தாவது நாளான விஜயதசமி பெருவிழா வாகக் கொண்டாடப்படுகிறது. விஜய என்பது வெற்றி யைக் குறிக்கும். தசமி என்பது பத்தாவது நாளினைக் குறிப்பதாகும். ஆதலால் அனைவருக்கும் வாழ்வினில் வெற்றியைத் தரவல்ல ஓர் உன்னதமான நோன்பு விஜ யதசமியாகும். கல்வி, செல்வம், வீரம் யாவும் ஒருங்கே சித்திகரமாகக் கைகூடி வாழ்வினை வரமாக்குவது விஜயதசமி. இம்முறை விசுவாவசு வருடம் புரட்டாதி மாதம் 22.09.2025 திங்கள் தமிழுக்கு 6ஆம் திகதி பிரதமை பின்னிரவு வரை அதாவது 3.26 வரை பங் காக நிற்பதனால் பதினோராவது நாளான 2.10.2025 வியாழன் அன்றுதான் விஜயதசமி சிறக்கிறது. ஆனால் வாக்கிய பஞ்சாங்க மரபாக விசுவாவசு வருடம் தமிழ்த் திகதிகளின் பிரகாரம் புரட்டாதி 6ஆம் திகதி ஆரம்பிக்கும் நவராத்திரி 16 ஆம் திகதி தசமி பிற்பகல் 3.36உடன் முடிவுறுகிறது. பங்காக நிற்பதன் பேறா கவே பதினொரு நாள் எல்லை கொண்டுள்ளது.

மன அழுக்கு என்று சொல்லும்போது ஆணவமே மனி தனிடத்தே மேலோங்கி ஆட்சிபுரிகிறது. ஆணவத்தை அழித்தொழித்து விட்டால் வீடு, நாடு, சமூகம், உலகமே இன்பமயமாகி இப்பிறவியின் பெரும்பயனைப் பேறாக்கி நூறாக்கி நீடுவாழமுடியும். இந்தப் பேற்றுக் கான ஒரு வழிகாட்டுதலாக விஜயதசமி விழா சிறப்பாக ஆலயங்களிலும், பாடசாலைகளிலும்,பொது நிறுவ னங்களிலும் பயபக்தியோடு கொண்டாடப்படுகிறது. விஜயதசமி நாளன்று ஆலயங்களில் வாழை வெட்டு தலான நிகழ்ச்சி எனும் சம்பிரதாயம் மரபுவழி வந்த ஒரு படிப்பினையைஎமக்குஉணர்த்துகிறது. அதாவது ஆணவ சம்ஹாரத்தினையே எடுத்தியம்புகிறது. விஜயதசமி யி லன்று, ஆலயங்களில் பிரதமகுருக்களானவர் மானம் பூவன்று ஆணவத்தை அழிப்பது போன்று தன்னைப் பாவனைசெய்து வாழையை ஒரேதடவையில் வாளி னால் ஓங்கி வெட்டிச் சரிப்பார். வாழை வெட்டு முகத்தில் இரத்தமாகும் படியாகக் குங்குமம் இட்டு ஆணவம் அழிந்ததாக அடியவர்களைப் புனிதப்படுத்துவார்.

இராமயணம், மகாபாரதம் மற்றும் உலக அரசியல் மாற்றங்கள் யாவுமே விஜயதசமி நாளதன் மகிமையை உணர்த்தி நிற்கின்றன. இராவணன் சீதையைக் கவர்ந்து சென்று ஆணவச்சிறைக்குள் கையகப்படுத்தி அடைக் கப்பட்டிருந்த நிலையில் இராமசாம்ராஜ்ஜியம் ஆண வத்தினைத் துவம்சம் செய்து சீதையை விடுவித்த நாள் விஜயதசமியாகும். ஶ்ரீராமபிரான் இராவணனோடு போர் புரிந்து வெற்றிகொண்ட நாளான விஜயதசமியை இந்தியாவில் ராம்லீலா என்று பெரு ஆரவாரமாக் கொண்டாடப்படுகிறது. மகாபாரதத்தில் காணி நிலம் வீடு மனை ஆட்சி அதிகாரம் வாழும் உரிமை யாவற் றையும் இழந்து தவித்த பாண்டவர்கள் 12 ஆண்டுகள் வனவாசம் முடிந்து மீண்டும் வீடு, நாடு, நகரம், ஆயுதம்,படை, செல்வம், பயிர் என எல்லாவற்றையும் பெற்ற தினம் விஜயதசமியாகும். மேலும் மகிடாசுரன் என்னும் அரக்கன் உலகை ஆட்டிப்படைத்து அனைத்து மக்களையும் வதைத்தும் வாட்டியபோது சிவசக்தியான வள் துர்க்கையாக அவதரித்து அசுர அரக்கத் தலை வனான மகிடாசுரனைக் கொன்றொழித்த தினமே விஜயதசமியாகும்.

ஏடு தொடக்குதல், சிட்சை வகுப்பு ஆரம்பித்தல், குரு ஆசீர்வாதம் பெறுதல், நுகம் வைத்தல், மாடு பூட்டி வண்டில் ஓடவைத்தல், மாட்டுக்குக் குறிசுடுதல், நாளுக்கு விதைத்தல், பட்டடை ஆரம்பித்தல், புதுத் தொழில் ஆரம்பித்தல், பட்டாபிஷேகம் செய்தல், போர்ப்பயிற்சி ஆரம்பித்தல், பூஜை செய்த ஆயுதங் களைப் பிரயோகம் செய்தல், புதிய வாகனங்களைக் கொள்முதல் செய்தல், தூரப்பயணம் மேற்கொள்ளு தல், புதுக்கட்சிகளை ஆரம்பித்தல், புதுக்குடித்தனம் ஆரம்பித்தல், அரங்கேற்றம் செய்தல், ஆடுகால் நாட் டுதல், பட்டிகள் அடைத்தல், பசு மாடு கொள்முதல் செய்தல், புதிய கணக்கு ஆரம்பித்தல், அடிக்கல் நாட் டுதல், கிணறு தோண்டுதல் போன்ற பல இன்னோ ரன்ன செயற்பாடுகளை விஜயதசமியன்று ஆற்றியும் போற்றியும் வெற்றிகொள்வர்.

குருவானவர்களும், மாணவர்களும் தாம் கற்றுவரும் நூல்கள் எல்லாவற்றையும் விஜயதசமியன்று பொட் டிட்டு, பூஜையில் வைத்து, பூவைத்து, தூபதீபம் காட்டு வார்கள். விஜயதசமிவரை வைக்கப்பட்ட கொலுக்கள் யாவும் பூஜிக்கப்பட்டு, நவதானிய அருச்சானைகளால் மகிழ்விக்கப்படும். ஒவ்வொரு இந்துவின் வீட்டிலும் விஜயதசமியானது ஒளிமயமாகி வெற்றிகளை அள் ளித்தரும் என்று உளமார நம்பிக்கை கொள்ளமுடியும்.

## புத்தக அரங்க விழா

யாழ்ப்பாணம், ஒக்.2

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டுத் தேசிய கலை இலக்கியப் பேரவையின் 'நூறு மலர்கள் மலரட்டும்' எனும் தொனிப்பொருளிலான விசேட புத்தக அரங்க விழா நாளை வெள்ளிக்கிழமை, நாளைமறுதினம் சனிக்கிழமை, மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் கோப்பாய் வடக்கு சரவணபவானந்த வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

வெள்ளி, சனி ஆகிய தினங்களில் மாலை 3.30 மணியள வில் ஈழத்து நூல்களின் அறிமுகமும் இலக்கியக் கலந்துரை யாடலும் சனி, ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மாபெரும் புத் தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் நடைபெறும். வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் முட்டை, ஆட்டுக் குட்டி ஆகிய சிறுவர் நாடகங்களும், சனிக்கிழமை மாலை 5 மணியளவில் இரண்டு நாடகங்களும் மேடையேற்றப்பட வுள்ளன. நிகழ்வுக்கான அனுமதி இலவசம் என அறிவிக் கப்பட்டுள்ளது. (ச-41-66)

## கலாசாலையில் ஏடு தொடக்கல்

யாழ்ப்பாணம், ஒக்.2

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் ஏடு தொடக் கும் நிகழ்வு விஜயதசமித் தினமான இன்று வியாழக்கிழமை காலை 9 மணி யளவில் கோப்பாய் ஆசிரியர் கலாசா லையில் அமைந்துள்ள யோகலிங்கேஸ் வரர் ஆலயத்தில் நடை பெறவுள்ளது.

இதன்போது கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் ஏடு தொடக்கிவைப்பார். கலாசாலைச் சமூகத் தினர் மாத்திரமன்றி விரும்பியவர்கள் தங்கள் பிள்ளைகளை அழைத்துவந்து ஏடு தொடக்க முடியுமென அறிவிக்கப்பட் டுள்ளது. (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம், ஒக்.2

சாவகச்சேரி நுணாவில் மேற்கு கிராம சேவகர் பிரிவில் இன்று வியாழக்கிழமை தொடக்கம் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்க்கெதிரான ஏ.ஆர். வி. தடுப்பூசி ஏற்றல் ஆரம்பமாகவுள்ளது.

அதன் பிரகாரம் நுணாவில் மேற்கு திலகம் பள்ளம் ஓய்வுமடம் மற்றும் வீரபத்திரர் கோவில் முன்றல் ஆகிய இடங்களில் காலை 9 மணிக்கும், தாய் சேய் கிளினிக் நிலையம் மற்றும் வேரக்கேணி கந்தசாமி கோவில் முன்றல் ஆகிய இடங்களில் மு.ப. 11 மணிக்கும், வேதாந்த மடத்தடி மருதடிப் பிள்ளையார் கோவில் முன்றல் மற்றும் வான்மதி சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் பி.ப. 1 மணிக்கும் இலவசமாக தடுப்பூசிகள் ஏற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 9)

# மாற்றுத்திறனாளிகள் தின ஆக்கத்திறன் போட்டிகள்!

யாழ்ப்பாணம், ஒக்.2

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம் கட்டுரை, சிறுகதை, கவிதை மற்றும் சித்திரம் வரைதல் போன்ற போட்டிகளை நடத்தவுள்ளது.

ஆக்கங்கள், உங்களது சொந்தப் படைப்பாகவும், இந்தப்போட்டிக்காக எழுதப்பட்ட அல்லது வரையப்பட்டதாகவும், ஊடகங்களில் வெளிவராததாகவும் இருத்தல்வேண்டும்.

'மாற்றுத்திறனாளிகளின் வாழ்வியலைக் கருப்பொருளாகக்கொண்டு' ஆக்கங்களை அமைத்தல் வேண்டும். ஒருவர் ஓர் ஆக்கத்தினை மட்டுமே அனுப்ப முடியும். ஆக்கங்களை ஏ-4 தாளில் கணினியில் தட்டச்சு செய்தோ அல்லது தெளிவான கையெழுத்தினால் எழுதியோ அனுப்பலாம்.

போட்டியாளர்கள் ஆக்கத்துடன் தங்களது முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பிறந்த திகதி என்பனவற்றினையும், பாடசாலை மாணவர்களாயின் மேலதிகமாக பாடசாலையின் பெயர், தரம் என்பனவற்றினையும் உள்ளடக்கிய சுயவிவரப் படிவத்தினையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

போட்டிக்கான ஆக்கங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, கருவி நிறுவனம் மூன்றாம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்ப வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. போட்டிகள் தொடர்பான விவரங்களை 0212054224, 0765515755, 0717100371 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு போட்டியிலும் 3 வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு பரிசில்கள், பதக்கங்கள், சான்றிதழ்கள் என்பன சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வின்போது வழங்கிவைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

# சு.தவச்செல்வனின் நூல்கள் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஒக். 2

மலையகத்தின் புகழ்பெற்ற இளம் எழுத்தாளர் சு.தவச்செல்வனின் மூன்று நூல்களின் அறிமுக நிகழ்வு யாழ்ப்பாணம் அம்மன் வீதியில் அமைந்துள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வவுனியா மற்றும் தர்காநகர் கல்வியியற் கல்லூரிகளின் ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி ந.இரவீந்திரன் நிகழ்வுக்குத் தலைமை தாங்குவார்.

நிகழ்வில் 'சிங்கமலை' சிறுகதைத்தொகுதி தொடர்பாக கவிஞர் சி.கருணாகரன், 'இலக்கியம் கலகம் அரசியல்' விமர்சனத் தொகுப்பு நூல் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறையின் சிரேஸ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன், 'மலையகத்தில் பாரதிச் சிந்தனைகள்' ஆய்வுக்கட்டுரைத்தொகுப்பு பற்றி கலாசார உத்தியோகத்தர் சபா தனுஜன் ஆகியோர் அறிமுகவுரைகளை ஆற்றவுள்ளனர். (ச-25)





யாழ் மறைமாவட்டத்தின்
முதன்மையானதும் புராதனமானதுமான
## புனித சிந்தாத்திரை அன்னை
## திருத்தல வருடாந்த திருவிழாவின்
## அன்னையின் கொடி இறக்க விழா
**05.10.2025 ஞாயிறு**
**காலை 11.00 மணி**
**திருப்பலியைத் தொடர்ந்து**
**கொடி இறக்கம், அன்னதானம்**

அன்னையின் கொடி இறக்க விழாவிற்கு உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!


யாழ் நகரிலிருந்தும் ஊர்காவற்றுறையிலிருந்தும் ஞாயிறு காலை 7.00 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பரிபாலகர்

(CS/59548) J-1


# மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 06 . 1954



மறைவு 30 . 09 . 2025

**கந்தையா பங்கயற்செல்வன் (கண்ணன்)**

வேலணை மேற்கு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பங்கயற்செல்வன் (கே.பி.செல்வன், சமாதான நீதிவான் , முன்னாள் உரிமையாளர், கருமாரி றேடர்ஸ், கொழும்பு) அவர்கள் கடந்த (30.09.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - தெய்வானப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுசீலாதேவியின் பாசமிகு கணவரும், திவாகரின் அன்புத் தந்தையும், தேனுஜாவின் (ஆசிரியை லைசியம் சர்வதேச பாடசாலை-வத்தளை) அன்பு மாமனாரும், காலஞ்சென்ற புனிதவதி மற்றும் நாகேஸ்வரி, பவநாதன், சரஸ்வதி, சதாசிவம் (ஓய்வுநிலை ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி), காலஞ்சென்ற இரஞ்சித்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கெரவலப்பிட்டிய மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**திவாகர் - 0777 00 43 14**
**49/39/0, மயான வீதி,**
**ஹெந்தளை, வத்தளை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


## யாழ்ப்பாணம் மாநகரசபை
## கேள்வி அறிவித்தல்
### கழிவகற்றல் சேவைக்கு உழவு இயந்திரங்களை சாரதி மற்றும் தொழிலாளர்களுடன் வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி கோரல் - 2025

01. மாநகர சபை எல்லைக்குள் தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை உழவு இயந்திரங்கள் மூலம் அகற்றுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

02. வாகனம் பயணிக்கின்ற தூரம் GPS மானி வாசிப்பின் அடிப்படையில் மாத்திரமே கணிக்கப்பட்டு வாடகைக் கட்டணமானது தீர்மானிக்கப்படும்.

பணிக்கப்படும் வட்டாரத்திலிருந்து தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை (உணவுக் கழிவுகள், உக்கக்கூடியவை, பொலித்தீன், பிளாஸ்ரிக், கண்ணாடி, ஏனையவை) மக்களுக்கு இடையூறு இல்லாமல் மூடிய வாகனத்தில் பாதுகாப்பான முறையில் அகற்றி காக்கைதீவு மற்றும் கல்லுண்டாயில் அமைந்திருக்கும் கழிவு சேர் நிலையத்திற்கு கொண்டு சென்று கழிவகற்றும் சேவைக்கு 6 மாத காலத்திற்கு (01.11.2025 - 30.04.2026) தகுதி வாய்ந்த சேவை வழங்குநரிடமிருந்து (உழவு இயந்திரம், சாரதி, தொழிலாளர் உட்பட) யாழ் மாநகரசபை பிராந்திய பெறுகைக்குழு தலைவரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி சேவைக்கு தகுதியானவர்கள் கேள்விப் படிவங்களை 02.10.2025 - 15.10.2025 வரையான காலப்பகுதியில் கடமை நாட்களில் பி.ப 2.00 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 1000.00 பணமாகச் செலுத்தி விண்ணப்பங்களை பெறுகை முகாமைத்துவப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். குறித்த சேவை தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் யாழ் மாநகரசபையின் பொதுச் சுகாதாரப் பொறியியல் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை தொலைபேசி இல - 0212217691, மின்னஞ்சல் முகவரி - mcjaffnamailv@yahoo.com மூலம் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணிவரை பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவங்களை 16.10.2025 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக **தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, மாநகரசபை, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு நேரில் / பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"கழிவகற்றல் சேவைக்கு உழவு இயந்திரங்களை சாரதி மற்றும் தொழிலாளர்களுடன் வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி கோரல் - 2025"** என தவறாது குறிப்பிடப்படல் வேண்டும்.

கேள்விகள் 16.10.2025 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்**

(CR 46388) E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைர விழா

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் வைர விழா நாளைமறு தினம் சனிக்கிழமை மாலை 3மணிக்கு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது கலை, கலாசார நிகழ்வுகளுடன் பண்பாட்டு ஊர்வலம், மங்கல வாத்திய இசை, நாட்டியாஞ்சலி, சிறப்புமலர் வெளியீடு, வீணைக் கச்சேரி, நாடகம், ஈழத்தின் புகழ்பூத்த இசை மேதைகளின் தெய்வீக இசைச் சங்கமம் என்பன இடம்பெறவுள்ளன. (ச-41)

# உற்பத்தி வீழ்ச்சியாலேயே சம்பா அரிசி விலையுயர்வு!

யாழ்ப்பாணம்,ஒக்.2

நாட்டில் 160 ஆயிரம் மெற்றிக்தொன் கீரிச்சம்பா அரிசி மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றது. இதன்காரணமாகவே சம்பா அரிசி விலை அதிகரித்துச் செல்கின்றது என்று வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். யாழ். மாவட்ட வர்த்தக சங்கப் பிரதிநிதிகளுடன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் நடத்திய சிறப்புக் கலந்துரையாடலின்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறுங்காலத் தேவையை நிறைவு செய்யும் வகையில் கீரிச்சம்பா அரிசியை இறக்குமதி செய்து சதோச விற்பனை நிலையங்கள் ஊடாக விநியோகிக்கவும், தொடர்ந்து அதன் உற்பத்தி அளவை அதிகரிப்பதே நோக்கமாகும். ஜனாதிபதி நாட்டுக்குத் திரும்பியவுடன் 40 ஆயிரம் மெற்றிக் தொன் கீரிச்சம்பா அரிசியை இறக்குமதி செய்யும் அனுமதியைப் பெற்றுத் தருவோம். நெல் விளைச்சல் அதிகமாகவுள்ள பொலநறுவை, அநுராதபுரம் மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் அரிசி ஆலைகள் நிறுவப்படவுள்ளன. பொலநறுவையிலிருந்து கொள்வனவுசெய்யப்படும் கீரிச்சம்பா அரிசியை அங்கீகரிக்கப்பட்ட விலையில் கொள்வனவு செய்யவும் வழிவகுக்கப்படும்- என்றார். (ச-66)

## பெறுகைகளுக்கான அறிவித்தல்

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்

### வைத்தியசாலைகளுக்கு அழுக்குத் துணிகள் சலவைச் சேவையினை வழங்குவதற்கான பெறுகை - 2025/2026

தலைவர், பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு அழுக்குத் துணிகள் சலவைச் சேவையினை வழங்குவதற்குத் தகமையுள்ள விலை மனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுப் பத்திரங்களினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | சேவை வழங்க வேண்டிய நிலையம் | கேள்வி உத்தரவாத முறி |
|---|---|---|---|---|
| 01 | H/LS/2025-2026 01தொடக்கம் 10வரை | அழுக்குதுணிகள் சலவைச் சேவை | பருத்தித்துறை பிரதேசத்திற்குட்பட்ட ஆதார வைத்தியசாலை, சத்திர சிகிச்சை கூடம் , பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு நிலையங்கள் (PMCU) | 10,000.00 |
| | | | (ஆ)தெல்லிப்பளை பிரதேசத்திற்குட்பட்ட ஆதார வைத்தியசாலை, சத்திர சிகிச்சை கூடம் , பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு நிலையங்கள் (PMCU) | 10,000.00 |
| | | | (இ),சாவகச்சேரி , ஊர்காவற்றுறை, ,கோப்பாய், சங்கானை, சண்டிலிப்பாய். ,வேலணை, நல்லூர் யாழ்ப்பாணம் மற்றும் உடுவில் பிரதேசத்திற்குட்பட்ட ஆதார வைத்தியசாலை, பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு நிலையங்கள் (PMCU) | 3000.00 |

1. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.
2. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலை மனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

   அ. விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   ஆ. அத்துடன் தொடர்புடைய வழங்கல் சேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஒப்பந்த அளிப்பிற்குத் தகமை பெறுவதற்கு விலை மனுதாரர்கள் பகுதி 2 பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும் 0212223725, 0212226253, 0212214966 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இவ் முகவரியில் வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணிவரை பரிசீலிக்க முடியும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 02 ஒக்டோபர் 2025 ஆம் திகதி தொடக்கம் 14.10.2025 ஆம் திகதி வரை 09:00 மணிதொடக்கம் 15:00 மணிவரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாகச் ரூபா 1,000.00 அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச் சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.
6. பெறுகை ஆவணங்கள் 15 ஆம் திகதி ஒக்டோபர் 2025 அன்று காலை 10.00 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
7. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 10 ஆம் திகதி ஒக்டோபர் 2025 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறும்.
8. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும். என்பதுடன் இப்பிணைப்பணம் அலுவலக காசாளரிடம் அல்லது வங்கியில் செலுத்தி அவ்வாவணத்தினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.
9. இவ்விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனு கோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்**
**021-222-3725, 021-222-6253, 021-221-4966 தொலைநகல்: 021-222-2971**
**மின்னஞ்சல்: rdhsjaffna15@gmail .com**



# மோ.சைக்கிள் – கார் நுணாவிலில் விபத்து!

## இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம்,ஒக்.2

மோட்டார் சைக்கிளும் காரும் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து நேற்றுமுன்தினம் மாலை சாவகச்சேரி நுணாவில் பகுதியில் நடந்துள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரி நோக்கி வந்த மோட்டார் சைக்கிள் காருடன் மோதியதில் விபத்துச் சம்பவித்துள்ளது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்துள்ளனர். விபத்துத் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-27)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 13 . 03 . 1943

இறப்பு 24 . 10 . 2023



**திருமதி கைலேஸ்வரி பாலசிங்கம்**

திதி – விஜயதசமி

...டன் அரவணைத்து பண்புடனே வளர்த்து – எங்களை
பாரினிலே வாழ்வாங்கு வாழ வைத்த – தாயே!
இவ்வுலகு விட்டு அவ்வுலகு சென்ற – உங்களை
இரண்டாமாண்டு நினைவு திதியில்
நினைத்து வணங்குகின்றோம் – அம்மா!

166/3, சேர்.பொன் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Keells

ஊட்டமளிக்கும் எதிர்காலம்
ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவு

முன்பள்ளிச் சிறார்களுக்கு 450,000 க்கும் மேற்பட்ட உணவு வேளைகள் வழங்கப்பட்டுள்ளன.

நீங்கள் எப்படி உதவ முடியும்?

உணவு அட்டையொன்றை வாங்குங்கள்.

ஒவ்வொரு 5 வேளை உணவுக்கும் 1 வேளை உணவை கீல்ஸ் வழங்குகின்றது.

ஊட்டமளிப்போம்

இலங்கையில் 5 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் 31% பேர் ஊட்டச்சத்து குறைபாடு உள்ளவர்கள். இதை நிவர்த்தி செய்வதற்காக, இந்த செயற்திட்டம் **100** பாடசாலைகளில் **450,000** க்கும் மேற்பட்ட சத்தான உணவுகளை வழங்கி, 15 மாவட்டங்களில் **3,700** க்கும் மேற்பட்ட சிறுவர்களை சிறுவர்களுக்கு பயனளித்துள்ளது

பாதுகாப்போம்

சிறுவர் பாதுகாப்பு குறித்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையுடன் இணைந்து, **500** பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களை இலக்காகக் கொண்டு 18 செயலமர்வுகள் மூலம் சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வு முயற்சிகளை நாங்கள் நடத்தியுள்ளோம்.








Sarvodaya thuru BDO DC GROUP



# வங்களாவடியில் புதிய கோப்சிற்றி

யாழ்ப்பாணம், ஒக்.2

வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைக் கட்டடத் தொகுதியில் வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வர்த்தகக் கிளைத் தொகுதி நேற்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் த.தர்மராஜேந்திரன் தலைமையில், யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரர் குறித்த கிளையைத் திறந்துவைத்தார். (ச-25, 27)

வேலணை பிரதேசமட்ட சிறுவர் கண்காணிப்புக் குழுக்கூட்டம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. (ச-25.9)



# சனசமூக நிலையம் திறப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.2

காங்கேசன்துறை உதயசூரியன் சனசமூக நிலைய (தற்காலிக கட்டடம்) திறப்புவிழா எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி தொடக்கம் 10 மணி வரை இடம்பெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் பூ. பிரபாகர் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. வடக்குப் பிரதேசசபைத் தவிசாளர் க.சுகிர்தன், சிறப்பு விருந்தினராக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி யூலியன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41-100)



தேசிய வாசிப்பு மாதம் மற்றும் சிறுவர் தினத்தை முன்னிட்டு வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் காங்கேசன்துறை பொது நூலகத்தால் காங்கேசன்துறை நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலய சிறார்களுக்கு சத்துணவு வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. (ச)

# 'சித்திர முத்திரைகள்' ஓவிய, கைவினை கண்காட்சி நாளை

யாழ்ப்பாணம்,ஒக்.2

திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் 'சித்திர முத்திரைகள்' எனும் ஓவிய,கைவினைப் பொருள்களின் கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை வரை தினமும் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை இல.128, டேவிற் வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கலைத்தூது அழகியல் கல்லூரியில் சித்திரப் பாடத்தையும் ஏனைய நுண்கலைப் பாடங்களையும் பயில்கின்ற மாணவர்களது ஆற்றல்களை வெளிக்கொணரும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டு கடந்த பல வருடங்களாக நடத்தப்பட்டு வருகின்ற இக்கண்காட்சி இம்முறையுடன் ஒன்பதாவது தடவையாக இடம்பெறுகின்றது. இதன்போது வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் உதவிக் கல்விப்பணிப்பாளர் நாகரத்தினம் ராஜன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்துவைக்கவுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொலிஸ் பரிசோதனை

கிளிநொச்சி, ஒக்.2

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பொலிஸ் பரிசோதனை கடந்த புதன் கிழமை இடம்பெற்றது. கிளிநொச்சிப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் ஜெயசாந்த டீ சில்வா கலந்துகொண்டு பரிசோதனைகளை மேற்கொண்டார். இதன்போது பொலிஸாரின் சீருடை, வாகனங்கள், அலுவலகங்கள் மற்றும் பாரிய குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கு பயன்படுத்தும் மோப்ப நாய்கள் என்பன பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. (ச-25,113)



நவராத்திரி தின விசேட பூசை வழிபாடுகளின் இரண்டாம் நாள் வழிபாடு கடந்த செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்றது. (ச-41-100)

நெடுந்தீவுப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சிறுவர்களுக்கான பிரதேச மட்ட சிறுவர்சபை கலந்துரையாடலும் தலைமைத்துவப் பயிற்சியும் பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன. (ச-25,9)






நெடுந்தீவுப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழான உணவு விற்பனை நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய நெடுந்தீவு மத்தி மேற்கு கிராம செயலகப் பிரிவுக்குரிய இடம் மற்றும் கட்டடம் என்பவற்றை அடையாளம் காண்பதற்காக பிரதேச செயலர் என்.பிரபாகரன் கடந்த செவ்வாய்க்கிழமை களவிஜயத்தை மேற்கொண்டு பார்வையிட்டார். (ச-25,9)



"எழுகை" அமையத்தின் ஒழுங்குபடுத்தலில் போரின்போது படுகொலை செய்யப்பட்ட மாணவர்கள் நினைவாக மாபெரும் குருதிக்கொடை முகாம் கிளிநொச்சி பசுமைப் பூங்காவனத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. (ச- 25,113)



பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக தொழில் முயற்சியாளர்களுக்கான முகாமைத்துவ பயிற்சிநெறி பிரதேச செயலாளர் இ.த ஜெயசீலன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கைத்தொழில் அபிவிருத்திச்சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற பயிற்சிநெறியில் வளவாளராக யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் அனுராகவன் கலந்துகொண்டார். (ச-25, 9)




தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்பட்ட மாவட்டமட்ட கரம் போட்டியின் தனிநபர் பெண்கள் பிரிவில் மண்கும்பான் இளைஞர் கழகத்தைச் சேர்ந்த கே. அக்சயா இரண்டாம் இடத்தினையும் ஆண்கள் பிரிவில் துறையூர் ஐயனார் இளைஞர் கழகத்தைச் சேர்ந்த கே. குருசரண் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர். (ச-25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் காட்டுமிராண்டித்தனம் ஜனநாயகத்துக்கு விரோதம்!

## சட்டத்தரணி ஸ்ரீகாந்தா தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஒக்.2**

**மன்னாரில் தமது இருப்பின் உரிமைக்காகப் போராடும் மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறை வன்முறையானது. மீண்டும் தமிழ்மக்கள்மீது அரங்கேற்றப்பட்ட அரச பயங்கரவாதத்தின் அப்பட்டமான வெளிப்பாடு எனத் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என். ஸ்ரீகாந்தா சுட்டிக்காட்டியுள்ளார்.**

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்துக்கு எதிரான அந்த மாவட்ட மக்களது உண்மையான - நீதியான - போராட்டத்தை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் அது சட்டவிரோதமானது. அதில் ஈடுபட்ட மக்களை சட்டரீதியாகக் கைதுசெய்திருக்கவேண்டும். ஆனால் அவர்களைத் தாக்குவதற்கும் காயங்களை ஏற்படுத்துவதற்கும் அரசுக்கு எந்த அதிகாரமும் இல்லை. அரசுக்கு எதிராக ஜனநாயக ரீதியான போராட்டங்கள் பெருமளவில் பரந்து விரிவடையும்போது அரசு அவை தொடர்பிலே எந்தகைய அணுகுமுறையைக் கையாளும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகவே இதனை நாங்கள் கருதுகிறோம்.

அத்துடன் இந்த அடாவடியை அங்கீகரிக்கவோ அல்லது ஆமோதிக்கவோ ஜனநாயகத்தை மக்களது அடிப்படை உரிமைகளை மதிக்கின்ற எவராலும் ஏற்றுக்கொள்ளமுடியாது. இந்தப் பிரச்சினையை நிதானமாகக் கையாள இந்த அரசு முனைந்திருக்க வேண்டும்.

அரசாங்கம் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களின் பிரதிநிதிகளை அழைத்துப்பேசி தன்னுடைய நிலைப்பாட்டில்கூட அவர்களுக்கு எடுத்துரைத்து ஒரு நிதானமாக தீர்வுக்கு வர முடியும் - என்றார். (ச-20)

## எரிவாயு...

எரிவாயு விலை தொடர்பான அறிவிப்பு, லாப் எரிவாயு நிறுவனத்தால் நேற்று வெளியிடப்பட்டது. அதன்படி, ஒக்ரோபர் மாதத்துக்கான லாப் எரிவாயு சிலிண்டரின் விலையில் எந்த மாற்றமும் இருக்காது என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, தற்போதுள்ளதைப் போன்று 4 ஆயிரத்து 100 ரூபாவாகவே எரிவாயு விலை பேணப்படவுள்ளது.

இதேவேளை, லிட்ரோ எரிவாயுவின் விலையிலும் மாற்றங்கள் இல்லை என்றும் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## பட்ஜெட்டுக்கு...

அரியாலை செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைகள் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று இடம்பெற்றன. மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்கான சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட் நகர்வுகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. இதன்போதே, பட்ஜெட்டுக்கு இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை என்ற விடயம் தெரியப்படுத்தப்பட்டது. இதையடுத்து, எதிர்வரும் 13ஆம் திகதிக்கு வழக்குத் தவணையிடப்பட்டுள்ளது. (அ-ம-26)

## முகமாலை...

வடக்குப் பகுதியிலுள்ள வீடொன்றின் உரிமையாளர், தனது வீட்டில் கிடங்கொன்றை வெட்டியுள்ளார். இதன்போது, அதற்குள் இருந்து ஆபத்தான வெடிபொருள்கள் வெளிப்பட்டுள்ளன. இது தொடர்பில் பளை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, பொலிஸார் கிளிநொச்சி நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று வெடிகுண்டுகளை மீட்டுள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-113)

## கண்ணிவெடி...

னர். கிளிநொச்சி மாவட்டத்தின் தட்டுவன்கொட்டிப் பகுதியில் அண்மையில் வெடிபொருள்களைக் கையாண்ட இருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அத்துடன், மேலும் சில இடங்களிலும் வெடிபொருள்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. இதையடுத்தே, அங்கு மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணிகளை மீண்டும் முன்னெடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்ததாவது:-

போரின் பின்னர் மீளக் குடியமர்த்தப்பட்டு கடந்த 15 வருடங்களாக நாங்கள் இங்கு வசித்து வருகின்றோம். இந்த இடைப்பட்ட காலத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கண்ணிவெடிகள் அவதானிக்கப்பட்டு, அது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு, பின்னர் அவை மீட்கப்பட்டுள்ளன. சிறுவர்கள்விளையாடுவதற்காக வெளியில் செல்லும்போதுகூட அச்சமான சூழலுக்குள்ளேயே அனுப்பிவைக்க வேண்டியுள்ளது. எனவே, இந்த விடயத்தைக் கருத்திற்கொண்டு, தட்டுவன்கொட்டியில் மீண்டும் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் இடம்பெறவேண்டும் - என்றனர். (அ-ம-113)

## வழக்குத்...

அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் உள்ளிட்ட அனைவரையும் நீதிமன்றம் பிணையில் விடுவித்தது.

பொதுமக்களின் எதிர்ப்பையும் மீறி, கடந்த வெள்ளிக்கிழமை இரவு மன்னாருக்குள் காற்றாலைக் கோபுரங்கள் அமைப்பதற்கான உபகரணங்கள் கொண்டு செல்லப்பட்டன. இதற்கெதிராக பொதுமக்கள் பெரும் போராட்டத்தை முன்னெடுத்தபோது, பொலிஸார் தடியடி நடத்தியதுடன், போராட்டத்தில் ஈடுபட்ட ஆறு பேருக்கு எதிராக வழக்கும் தொடர்ந்தனர்.

இந்தவழக்குநேற்றுவிசாரணைக்காக வந்தபோதே, சந்தேகநபர்கள் ஆறு பேரையும் தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப்பிணையில் செல்லுமாறு நீதவான் அறிவுறுத்தினார். வழக்கு விசாரணைகள் மீண்டும் நவம்பர் மாதம் 17ஆம் திகதி விசாரணைக்காக எடுக்கப்படவுள்ளது. (அ-ம-இ)

## 47மாணவர்கள்...

உண்வு நஞ்சாக மாறியதைத் தொடர்ந்து 45 மாணவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஹிங்குரக்கொட பகமூன கல்வி வலயத்தில் கோட்டபிட்டிய கனிஷ்ட வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களே இவ்வாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களாவர்.

சிறுவர் தினமான நேற்று பாடசாலையில் வைத்து மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உணவே நஞ்சாக மாறியதாக கூறப்படுகின்றது. மேலதிக விசாரணைகளை பகமுனப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-சீ)

## தாஜுதீனின்...

தமது அரசியல் இலாபங்களுக்கு பயன்படுத்தாமல் அரசாங்கம் பக்கச்சார்பற்ற விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும். தற்போதுள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவு பொய்யான சாட்சியங்களை உருவாக்கி அரசாங்கத்தை மகிழ்வித்து வருகிறது. இந்த விடயத்திலும் அவ்வாறு செயற்பட்டால், அது தற்போதைய அரசாங்கம் தாஜுதீனின் ஆன்மாவுக்கு இழைக்கும் அநீதியாகவே அமையும்.

அரசாங்கத்திடம் கேள்விகளை எழுப்பும்போது அரசாங்கம் குறித்த விடயத்தை நீர்த்துப்போகச் செய்வதற்காக, பிறிதொரு விடயத்தை முன்வைக்கின்றது. இதை ஏற்க முடியாது. அத்துடன், மைத்திரி - ரணில் கூட்டாட்சிக் காலத்திலும் தாஜுதீனின் உயிரிழப்பில் ராஜபக்சக்களைத் தொடர்புபடுத்தி பொய்யான சாட்சியங்கள் உருவாக்கப்பட்டன - என்றார். (அ-ம-இ)

## பொலிகண்டியில்...

நேற்று நண்பகல் வேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில்பொலிஸாரிடம்முறைப்பாடு வழங்கப்பட்ட நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். சந்தேகநபர்கள் எவரும் நேற்றுவரை கைது செய்யப்படவில்லை. (அ-ம-27)

## பருத்தித்துறை...

தனியார் நிறுவனம் ஒன்றால், மூன்று மில்லியன் ரூபா நிதியில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மிகக் குறைந்த கட்டணத்தில் சாதாரண மக்களும் பயன்படுத்தக் கூடிய வகையில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, அதனை ஏற்பாடு செய்த பருத்தித்துறை நகரபிதா வின்சன் டீ போல் டக்ளஸ் போல் தெரிவித்துள்ளார். (அ-ம-27)

## வோல்கர்...

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் ஏற்பாட்டில், தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குச் சர்வதேசத்திடம் நீதிகோரி, செம்மணியில் கடந்த ஒரு வாரமாக சுழற்சி முறையில் உணவுத் தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தின் இறுதிநாளும் சிறுவர் தினமுமான நேற்று, செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட சிறுவர் என்புத் தொகுதிகளுக்கு நீதிகோரி தீப்பந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. இதன்போதே, வோல்கர் ட்ரக்கின் அறிக்கை தீக்கிரையாக்கப்பட்டது.

'சர்வதேசத்தின் கண்காணிப்பில் இலங்கையால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளை நாங்கள் ஏற்கப் போவதில்லை. போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைக்கு உள்ளகப் பொறிமுறையையும், கலப்புப் பொறிமுறையையும் நாங்கள் நிராகரிக்கின்றோம். நாங்கள் கேட்பது முற்றுமுழுதான சர்வதேசப் பொறிமுறையைமட்டும்தான். குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட தரப்பு விசாரணையை நடத்துவதற்கு நாங்கள் அனுமதிக்க மாட்டோம்' என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வலியுறுத்தினார்கள்.

இதனைத் தொடர்ந்து சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டமும் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டது. (அ-ம-26-66-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CMYB

# இளைஞர் கழகங்களிடையே விளையாட்டுப்போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக். 2
வேலணைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகள் அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் மைதானத்தில் இன்று வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளன. வேலணைப் பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத் தலைவர் அ.யோபாபு தலைமையில் இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன. (ச-25, 9)


## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகரை அண்டிய பகுதியில் (பஸ் நிலையத்தில் இருந்து நடந்து செல்லும் தூரத்தில்) நிறுவனம் ஒன்றுக்கு வீடு தேவை.

தொடர்பு:
077 9592 628

CR 463951 A


# ஏடு தொடக்கலும் நவராத்திரி பூஜையும்

யாழ்ப்பாணம், ஒக்.2
கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் ஏடு தொடக்கலும் , நவராத்திரிப் பூஜை வழிபாடும் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.
அத்துடன் சிறுவர்களுக்கு கையேடு இலவசமாக வழங்கப்படுமெனவும் பாடசாலை அதிபர் கெ.தவ கீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ச-25, 17)


Techna Technical Institute
A/L TECHNOLOGY STREAM

A/L தொழினுட்பப்பிரிவு

## விஷேட கருத்தரங்கு
## A/L 2025 BATCH

ஆரம்பம் - 03.10.2025, வெள்ளி, மாலை 2.30 மணிக்கு

அனுமதிகளுக்கு வீரசிங்கம் மண்டபம், 2ஆம் மாடி, யாழ்ப்பாணம். 077 170 3549

| | |
|---|---|
| தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்<br>03.10. வெள்ளி - 2.30PM - 5.30PM \| 04.10. சனி 8.30AM - 5.30PM<br>05.10. ஞாயிறு - 8.30AM - 5.30PM \| 06.10 திங்கள் 8.30AM - 3.00PM | S.சக்தி B.Sc(Hons), M.Sc |
| பொறியியல் தொழினுட்பவியல்<br>10.10. வெள்ளி - 2.30PM - 5.30PM \| 11.10. சனி 8.30AM - 5.30PM<br>12.10. ஞாயிறு - 8.30AM - 5.30PM \| 13.10 திங்கள் 2.30PM - 5.30PM | S.மயூரதன் B.Ed(Hons) ET, A.சஞ்சீவன் B.Ed(Hons) ET |
| உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்<br>10.10. வெள்ளி - 2.30PM - 5.30PM \| 11.10. சனி 8.30AM - 5.30PM<br>12.10. ஞாயிறு - 8.30AM - 5.30PM \| 13.10 திங்கள் 2.30PM - 5.30PM | P.நிரோஜனன் B.Sc(Hons), PGDE, M.விஷ்ணு B.Sc(Hons) |
| தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் | T.அதுபாலதரன் B.Sc (Hons), M.Sc (CS), PGDE |
| விவசாய விஞ்ஞானம் | S.சஜீவன் B.Ed(Hons) Agri |
| கணிதம் | T.சசிகரன் B.Sc |
| புவியியல் | S.P.அர்ஜ் B.A(Hons) |

17.10. வெள்ளி - 2.30PM - 5.30PM | 18.10. சனி 8.30AM - 5.30PM
19.10. ஞாயிறு - 8.30AM - 5.30PM | 21.10 செவ்வாய் 2.30PM - 5.30PM



## வாகன சாரதி தேவை



யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனமொன்றின் நிர்வாக முகாமையாளருக்கு 40 வயதுக்கு மேற்பட்ட வாகன சாரதி தேவை.
தேவையேற்படின் தங்குமிட வசதியும், உணவும் வழங்கப்படும்.

**அனுபவத்துக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.**

தொடர்பு:- 077 120 9998


# பெண் கைதிகளுடன் சிறையில் 47 குழந்தைகள்!!

**கொழும்பு,ஒக்.2**
**2025ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின்கீழ் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள பெண்கைதிகளுடன் 47 குழந்தைகள் சிறைச்சாலையில் உள்ளதாக சிறைச்சாலைத் தலைமையகம் தெரிவித்துள்ளது. 20 ஆண் குழந்தைகளும் 27 பெண் குழந்தைகளுமே இவ்வாறு பெண் கைதிகளுடன் சிறைச்சாலையில் உள்ளனர்.**

2025ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் 1ஆம் திகதி முதல் செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 1483 பெண்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின்கீழ் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 229 பெண்கள் குற்றவாளிகளாகநிரூபிக்கப்பட்டுசிறைத்தண்டனை பெற்றுள்ளனர்.
2025ஆம் ஆண்டின் ஜனவரிமாதம் 1ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 184 பெண்கள் போதைப்பொருள் குற்றம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின்கீழ் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.
அவர்களில் 75 பெண்கள் ஐஸ் போதைப்பொருள் தொடர்பிலும், 97 பெண்கள் ஹெரோய்ன் போதைப்பொருள் தொடர்பிலும், 8 பெண்கள் கஞ்சா போதைப்பொருள் தொடர்பிலும் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலைத் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ச-இ)


## மரண அறிவித்தல்



ஸ்ரீமதி சோமசுந்தரக்குருக்கள் ரஞ்சனா

வட்டுக்கோட்டை பங்குரு வைரவர் கோவிலடியை பிறப்பிடமாகவும் நீர்வேலி (லாய்க்காற் தரவை மூத்தவிநாயகர் ஆலயம்) வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீமதி சோமசுந்தரக்குருக்கள் அவர்கள்காலமாகி விட்டார்.
அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரக் குருக்கள் அவர்களின் அன்பு மனைவியும், சீதாலக்ஷ்மி (லண்டன்), சௌத்தரி (நல்லூர்), மதுராம்பிகை (கொழும்பு), சுகன்யா (லண்டன்), பிக்ஷாடனக்குருக்கள் (சாய்ராம் நீர்வேலி மூத்த விநாயகர் ஆலய பிரதம குரு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சுந்தரேசக்குருக்கள், குகதாசசர்மா, சோமஸ்கந்த ரமேஸ் குருக்கள், சுப்பிரமணிய சர்மா, துளசி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2025) வியாழக்கிழமை பிற்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று தகனகிரியைகளுக்காக நீர்வேலி கும்பமயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டு கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
பிள்ளைகள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்




படங்கள் ஐ. சிவசாந்தன்



யாழ். வண்ணை வேங்கடேச ஸ்ரீ வரத ராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா நேற்று புதன்கிழமை காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.10. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org